இல்லாத நிலைமையும் இருக்கிறது. சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களைப் போட்டிருப்பதாக அறிகிறோம். அது இந்த அவையிலே ஓர் அறிக்கையாகத் தாக்கல் செய்யப்படுமா? மக்களுக்கு என்ன செய்ய இருக்கிறோம் என்பதை இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கின்ற அளவுக்கு ஒரு நல்ல அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, வறட்சி ஆங்காங்கு தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறதென்ற உடனே தமிழக அரசின் சார்பாக 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஆங்காங்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் குறிப்பிட்டவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டை அண்மையிலே கூட்டி, அந்த மாநாட்டிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசின் உதவியை நாம் எதிர்பார்த்தாலும்கூட, அந்த உதவிக்காகக் காத்திராமல், ஆனால் வருமென்று எதிர்பார்த்து, மேலும் ஒரு 15 கோடி ரூபாயை மாவட்டங்களிலே வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட, அவர்களுக்கெல்லாம் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் உடனடியாக நடைபெற வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு நானும், மற்ற அமைச்சர்களும், மற்றும் முக்கிய அதிகாரிகளும் வறட்சிப் பகுதியாக உள்ள இடங்களுக்கு எல்லாம் சுற்றுப்பயணம் செய்து, வறட்சிப் பணிகளைத் தீவிரமாக முடுக்கிவிட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட மேலும் ஆதாரங்கள் இருக்குமானால், நண்பர் உகம்சந்த் போன்றவர்கள் உதவுவார்களேயானால், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ). தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று திருவாடானையில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து.

திரு. கே. ஆர். இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இலவச அரிசி வழங்கும் விழா திருவாடானையில் 14-4-1989 அன்று நடைபெற்றது. இந்த விழாவிற்கு அரசுத் துறையான கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். வரவேற்பு இதழில், தலைவராக கே. ஆர். இராமசாமியாகிய என்னையும், முன்னிலை என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களையும், அரிசி வழங்குவதற்கு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருமான திரு. எஸ். முருகப்பன் அவர்களையும் போட்டு, அழைப்பிதழை வெளியிட்டிருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினராகிய நானும், மத்திய அமைச்சர் அவர்களும் இந்த விழாவில் கலந்துகொள்வதாக இருந்தது. பெருந் தலைவர் அரிசி வழங்குவது குறித்து அதிகாரிகளிடம் கேட்டதற்கு இது மேலிடத்து உத்தரவு என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இதை நான் இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இது கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு உரியதே தவிர, வேறல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற கருத்தை ஒட்டி ஒரு விடை அளிக்க வேண்டுமானால், கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே தான் சொல்ல முடியும். பேரவைத் தலைவர் அவர்கள் இதை அனுமதித்தாலும்கூட, அமைச்சரவையினால் உடனடியாகப் பதில் சொல்லக்கூடிய ஒன்றல்ல. எனவே இப்படிப்பட்ட பிரச்சினையை இந்த நேரத்தில் எழுப்புவதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இதிலே ஒழுங்குப் பிரச்சினையில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நான் பதில் சொல்லப் போகிறேன். திரு. கே. ஆர். இராமசாமி அவர்கள் இது பற்றி என்னிடத்திலே தெரிவித்து, அவையினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் முறைப்படி அதை எழுதிக் கொடுத்து, கவன ஈர்ப்பாகக் கொடுத்தால் முறையான விடை தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், இது போன்ற செயல்களுக்கு அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடையிலே நானும் ஒரு செய்தியைச் சேர்த்துச் சொல்லவேண்டும். ''Protocol'' என்ற வரிசை முறை இருக்கிறது. அந்த மதிப்பு முறையைப் பின்பற்ற வேண்டுமென்று அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றைப் பேரவைத் தலைவரோடு தொடர்புடையது என்பதால், நினைவூட்ட வேண்டும். பேரவைத் தலைவர் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயர் போடப்பட்டும், அவர் கலந்துகொள்ளவில்லை என்பதை நினைவுபடுத்த வேண்டும். இது போன்ற குறைபாடுகள் ஏராளமாக இருப்பதால், அனைத்தையும் கவன ஈர்ப்பாகக் கொடுத்து, அமைச்சருடைய பதிலைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, ஏழை எளிய மக்களுக்கு-அதிலும் 300 ரூபாய்க்கும் குறைவாக வருவாய் உள்ளவர்களுக்கு இலவச அரிசியும், துணிமணியும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பழைய பிரச்சினை. நேற்று மாலையிலிருந்து இன்று காலைக்குள் எதுவும் நடக்கவில்லை. தயவுசெய்து உட்காருங்கள்.